**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதுகுளத்தூர்**
**முன்னிலை: திரு.சு.அருண்சங்கர், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர், முதுகுளத்தூர்.**

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 29ம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.171/2023**

**CNR.NO.TNRM08-006098-2023**

தமிழக அரசுக்காக,
காவல் சார்பு ஆய்வாளர்,
கீழத்தூவல் காவல் நிலையம்,
குற்ற எண்.17/2023 -- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

1. அஜித் (எ) அஜித்குமார், வயது 25/023,
   த/பெ.அய்யாச்சாமி,
   புழுதிக்குளம்,
   முதுகுளத்தூர் தாலுகா,
   இராமநாதபுரம் மாவட்டம்.

2. முரளி (எ) முரளிதரன், வயது 21/2023,
   த/பெ.சண்முகம்,
   புழுதிக்குளம்,
   முதுகுளத்தூர் தாலுகா,
   இராமநாதபுரம் மாவட்டம்.

3. அய்யாச்சாமி, வயது 57/2023,
   த/பெ.கருப்புச்சாமி,
   புழுதிக்குளம்,
   முதுகுளத்தூர் தாலுகா,
   இராமநாகபாம் மாவட்டம். -- எதிரிகள்

| **வழக்கு சுருக்கம்** | | |
|---|---|---|
| 1 | குற்ற நிகழ்வு நாள் | 17.02.2023 |
| 2 | தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 18.02.2023 |

| | | |
|---|---|---|
| 3 | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | A1 and A2 – 18.02.2023 to 23.02.2023 |
| 4 | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 29.08.2023 |
| 5 | கு.வி.மு.ச. பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 16.10.2023 |
| 6 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | **Crmp.No.1048/2024 Section 320(ii) Crpc petition filed and Dismissed on 14.02.2024**<br><br>**Crmp.No.1330/2024 Section 311 Crpc petition filed and allowed on 23.02.2024** |
| 7 | சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **Date of Chief** **Date of Cross**<br>PW–1 : 14.02.2024 14.02.2024<br>PW–2 : 14.02.2024 14.02.2024<br>PW–3 : 22.02.2024 22.02.2024<br>PW–4 : 23.02.2024 23.02.2024 |
| 8 | கு.வி.மு.ச. பிரிவு 313–ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 23.02.2024 |
| 9 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விபரம் | A1 and A2 – 25.09.2023 to 04.10.2023 |
| 10 | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | இல்லை |

இவ்வழக்கு கடந்த 01.09.2023ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.02.2024 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.D. பாண்டிக்குமார், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு

வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**இவ்வழக்கானது எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPC–ன் கீழ் கீழத்தூவல் காவல் நிலைய குற்ற எண்.17/2023–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் வாயிலாக எழுந்துள்ளது.**

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>

**1)** கடந்த 17.02.2023 ம் தேதி இரவு 08.00 மணியளவில் தினேஷ்குமார் என்பவர் புழுதிக்குளம் கிராமத்தில் உள்ள தேவர் திண்ணை அருகில் இருக்கும்போது அங்கு வந்த 1 மற்றும் 2 ம் எதிரிகள் இருவரும் கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு தினேஷ்குமார் அவரது வீட்டில் ஹோம் தியேட்டர் ஸ்பீக்கரில் அதிக சத்தத்துடன் பாட்டு போட்டது சம்மந்தமாக தினேஷ்குமாரை பார்த்து ஏண்டா தேவிடியா மகனே வீட்டில் யாரும் இருக்க வேணாமா ஏண்டா பாட்டு அதிக சத்தமா வச்சு கேக்கிற என்று தகாத வார்த்தையால் திட்டி தினேஷ்குமாரை 1 மற்றும் 2 எதிரிகள் இருவரும் சேர்ந்து கையால் அடித்து தள்ளிவிடவும் அப்போது அருகில் இருந்த இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரர் குணபாலன் சண்டையை விலக்கிவிட சென்றபோது 1 மற்றும் 2 எதிரிகள் குணபாலனை பார்த்து நீ யாருடா தாயோழி கேக்குறதுக்கு என தகாத வார்தையால் பேசி 1ம் எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் குணபாலனின் வலது கன்னம் மற்றும் இடது நெற்றிக்கு மேல் குத்தி இரத்தக்காயம் ஏற்படுத்திய போது விலக்க ஓடி சென்ற அபினேஷ் என்ற அபிஷேக்யை 3ம் எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் வலதுபக்க விலாவில் கத்தியால் குத்தி இரத்தக்காயம் ஏற்படுத்தியுள்ளார். பின்பு கத்தியால் குணபாலனின் வலதுபக்க முதுகில் கீறி ரத்தக்காயம் ஏற்படுத்தியுள்ளார். பின்பு எதிரிகள் அனைவரும் சேர்ந்து குணபாலனை பார்த்து கத்தியை காட்டி இன்று

தப்பித்துவிட்டீர்கள் இனி உங்களை எங்கு பார்த்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்ததாக கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் கீழத்தூவல் போலீசார் விசாரித்து குற்றம் புரிந்ததாக கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் படி குற்ற இறுதி அறிக்கையை அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ளார்.

**2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கு.வி.மு.ச பிரிவு 190(1)(b)ன் படி கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு 204ன் படி அழைப்பாணை அனுப்பி எதிரிகள் ஆஜரானவுடன் கு.வி.மு.ச.பிரிவு 207ன் படி இலவசமாக நகல்கள் வழங்கப்பட்டு எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPC–ன் படியான குற்றத்திற்கு குவிமுச பிரிவு 240ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளிடம் வினவி கேட்டப்போது எதிரிகள் மறுத்ததால் கு.வி.மு.ச.பிரிவு 242ன் படி அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**3)** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்று பொருள்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>அரசு தரப்பு சாட்சியங்களின்படி வழக்கு:</u>–

**4) அ.சா.1 திரு. குணபாலன் தனது சாட்சியத்தில்** சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1ன் ஊரில் சுமார் 40, 50 நபர்கள் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்துள்ளார்கள். அப்போது என்னவென்று அ.சா.1ம், தினேஷ்குமார், அபிஷேக் ஆகியோர் சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் கீழே விழுந்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும், எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் இருந்த குடும்ப தகராறு காரணமாக அ.சா.1 காவல்நிலையத்தில் போலிசாரிடம் கூறியபோது போலிசார் எழுதப்படாத வெள்ளைத்தாளில்

கையொப்பம் வாங்கியுள்ளார்கள். அ.சா.1 யிடம் காட்டப்பட்ட புகார் மனுவிலுள்ள கையொப்பம் அவருடையது தான். **(புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1).** எதிரிகள் எங்களை அசிங்கமாக பேசி அடித்து காயம் ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ அ.சா.1 எந்த புகாரோ, வாக்குமூலமோ போலிசாரிடம் கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**5) அ.சா.2 திரு. அபிஷேக் தனது சாட்சியத்தில்** எதிரிகளால் அ.சா.2 க்கு வந்தவிதமான காயங்களும் ஏற்படவில்லை என்றும், இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6) அ.சா.3 திரு. தினேஷ் தனது சாட்சியத்தில்** சுமார் 1 வருடங்களுக்கு முன்பாக அ.சா.3 ன் ஊரில் சுமார் 40, 50 நபர்கள் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்துள்ளார்கள். அப்போது என்னவென்று அ.சா.3 ம், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் கீழே விழுந்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. எதிரிகள் எங்களை அசிங்கமாக பேசி அடித்து காயம் ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ அ.சா.3 எந்த புகாரோ, வாக்குமூலமோ போலிசாரிடம் கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7) அ.சா.4 சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. கோட்டைச்சாமி தனது சாட்சியத்தில்,** இவ்வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு.ராஜாராம்பாண்டியன் அ.சா.4 டன் பணிபுரிந்த காரணத்தினால் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும் சாட்சியம் அளித்துள்ளார். கடந்த 18.02.2023 ம் தேதி 08.00 மணியளவில் அவர் நிலையப் பொறுப்பில் இருந்தபோது புழுதிக்குளம் கிராமத்தை சேர்ந்த அ.சா.1 குணபாலன், த/பெ. கண்ணன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்றுள்ளார். **(புகார் மனு அ.சா.ஆ.2).** புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.17/2023

இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3).** பின்பு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான முனியசாமி மற்றும் தாமரை ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தும், வழக்கு சொத்தை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியுள்ளார். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் அத்தாட்சி அசா.ஆ.6).** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகள் குணபாலன், தினேஷ்குமார், அபினேஷ், செந்தில்குமார், விக்னேஷ்வரன், மஞ்சுளா, முனியசாமி மற்றும் தாமரை ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 1 மற்றும் 2 எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 3ம் எதிரி முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர்கள் திரு.உதயகுமார் மற்றும் திரு.ஹெலன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு மற்றும் கருத்துரை பெற்றுள்ளார். **(குணபாலனுக்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.7, தினேஷ்குமாருக்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.8, அபினேஷ்க்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.9, அபினேஷ்க்கு வழங்கப்பட்ட கருத்துரை அசா.ஆ.10).** பின்பு வழக்கு சொத்து படிவம்–91 மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். **(படிவம் – 91 அசா.ஆ.11, 10cm மரப்பிடியுடன் கூடிய 14cm இரும்புடன் மொத்தம் 24cm நீளமுடைய கத்தி ஒன்று அசா.பொ.1 மற்றும் 10.5cm கருப்பு டேப் சுற்றப்பட்ட ரப்பர் பிடியுடன் 19cm இரும்புடன் மொத்தம் 29.05cm நீளமுள்ள கத்தி ஒன்று அசா.பொ.2).** பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8) அரசு தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்களில் எதிரிகளுக்கு எதிராக தோன்றும் விபரங்கள் குறித்து எதிரிகளிடம் குற்றவியல் விசாரணைமுறை சட்டம் பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் கேள்வி கேட்டபோது அவை பொய் சாட்சி என்று எதிரிகள் மறுத்துவிட்டார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறினார்கள்.

9) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPC கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

10) அ.சா.1 திரு. குணபாலன் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டும், அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் தங்களுக்கு எந்தவிதமான காயமும் எதிரிகளால் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டும், அ.சா.1 எந்தவிதமான புகாரும் அளிக்கவில்லை என சாட்சியம் அளித்திருப்பதிலிருந்தும், அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பாடாக இருப்பதால் அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகமாக உள்ளது. இதனால், அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை ஆகியவை இந்நீதிமன்றத்தால் நம்பும்படியாகவும் ஏற்றுக் கொள்ளப்படும் படியாகவும் இல்லை.

11) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள காயம்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று நிரூபிக்கும் வகையில் எந்தவொரு சாட்சியமும் எதிரிகளுக்கு எதிராக இடம்பெறாத நிலையில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும்,

இவ்வழக்கில் புலன் விசாரணை குறித்து விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.4 திரு.கோட்டைச்சாமி சிறப்பு சார்பு ஆய்வாளர் சாட்சியத்திற்கு ஒத்துரைவாக எந்த சாட்சியங்களும் காணப்படாததால் அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு எதிரிகள் தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**12)** எனவே மேற்படி அரசு தரப்பு சாட்சியங்களில் சங்கதிகள் மற்றும் விவாதிக்கப்பட்ட காரணங்களில் இருந்தும் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPC படியான ஆக்கக்கூறுகளை இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**13)** முடிவாக மேற்கண்ட ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் மற்றும் விவாதிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் அரசுத்தரப்பு வழக்கில் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPC படியான குற்றத்தை போதுமான மற்றும் தெளிவான சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPC படியான குற்றச்சாட்டிலிருந்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**14)** இவ்வழக்கில் PR.No.44/2023, நாள்,20.02.2023–ல் பதிவு செய்யப்பட்ட அசா.பொ.1 – 10cm மரப்பிடியுடன் கூடிய 14cm இரும்புடன் மொத்தம் 24cm நீளமுடைய கத்தி ஒன்று மற்றும் அசா.பொ.2 – 10.5cm கருப்பு டேப் சுற்றப்பட்ட ரப்பர் பிடியுடன் 19cm இரும்புடன் மொத்தம் 29.05cm நீளமுள்ள கத்தி ஒன்று ஆகியவை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அரசுடமையாக்க உத்தரவிடப்படுகிறது.

**15)** எதிரிகள் வழக்கு விசாரணையின் போது எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் கு.வி.மு.ச. பிரிவு 437(A)ன் படி எழுதிக் கொடுத்த பிணை ஆவணமாக பாவிக்கப்பட்டு மேற்படி பிணை ஆவணம் தீர்ப்பு பகரப்பட்ட தேதியிலிருந்து 6 மாதங்கள் கழித்து தானாக ரத்து ஆகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 29ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–சு. அருண்சங்கர்),

நீதித்துறை நடுவர்,
முதுகுளத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

1) அ.சா.1 – திரு. குணபாலன்

2) அ.சா.2 – திரு. அபினேஷ்

3) அ.சா.3 – திரு. தினேஷ்குமார்

4) அ.சா.4 – திரு. கோட்டைச்சாமி (சிறப்பு சார்பு ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

1) அ.சா.ஆ. 1 – புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும்

2) அ.சா.ஆ.2 – புகார் மனு

3) அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

4) அ.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்

5) அ.சா.ஆ.5 – பார்வை மகஜர்

6) அ.சா.ஆ.6 – அத்தாட்சி

7) அ.சா.ஆ.7 – குணபாலனுக்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு

8) அ.சா.ஆ.8 – தினேஷ்குமாருக்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு

9) அ.சா.ஆ.9 – அபினேஷ்க்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு

10) அ.சா.ஆ.10 – அபினேஷ்க்கு வழங்கப்பட்ட கருத்துரை

11) அ.சா.ஆ.11 – படிவம் – 91

**அரசு தரப்பு சான்றுபொருள்:**

1) அசா.பொ.1 – 10cm மரப்பிடியுடன் கூடிய 14cm இரும்புடன் மொத்தம் 24cm நீளமுடைய கத்தி ஒன்று மற்றும்

2) அசா.பொ.2 – 10.5cm கருப்பு டேப் சுற்றப்பட்ட ரப்பர் பிடியுடன் 19cm இரும்புடன் மொத்தம் 29.05cm நீளமுள்ள கத்தி ஒன்று

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

**குறிப்பு :–**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள். மேல்முறையீடு காலத்திற்கு பிறகு பிணை ஆவணம் ரத்துசெய்யப்படுகிறது.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–சு. அருண்சங்கர்),

நீதித்துறை நடுவர்,
முதுகுளத்தூர்.